கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம்

பழவாத்தான்கட்டளை ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை: திரு. S.சந்திரசேகரன்

ந.க.எண்:27/2024 நாள்:12.02.2024

பொருள்: மனைப்பிரிவு - மாவட்ட நகர் ஊரமைப்பு இயக்குநர் தஞ்சாவூர் - மாவட்டம் கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம் பழவாத்தான்கட்டளை ஊராட்சி கிராம புலஎண்: 22/2A1B -ல் 41000 சதுரடி பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவு ம.வ/கு.உ.தி.கு எண் SWP/03/2024 ன்படி அங்கீகாரம் அளித்து உத்தரவு வழங்குதல் தொடர்பாக:

பார்வை: 1. உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், தஞ்சாவூர் மாவட்ட கடிதம் ந.க.எண்: 87VXWDR7/TD4/2024/TCP நாள்:05.02.2024.
2. திட்ட அனுமதி எண்:08/2024.
3. இணை சார் பதிவாளர் கும்பகோணம் தானப்பத்திர ஆவண எண்:318 நாள்:22.01.2024
4. ஊராட்சி தீர்மான எண்:21 நாள்:09.02.2024

உத்தரவு:

பார்வை 1-ல் மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் தஞ்சாவூர், அவர்களின் உத்தரவில் கண்ட கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம் பழவாத்தான்கட்டளை ஊராட்சி கிராம புலஎண்:22/2A1B-யில் 41000 சதுரடியில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவு ந.க.எண்:87VXWDR7/TD4/2024/TCP நாள்:05.02.2024யின் படி மனைப்பிரிவிற்கும் ம.வ/கு.உ.தி.கு.எண்:SWP/03/2023 என வரைப்படத்திற்கும் எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வரைப்படத்தின்படி சாலைகளை ஊராட்சி தானமாக எடுத்துக்கொள்ள உத்தரவிட்டதை அடுத்து,

பார்வை 2-ல் காணும் சார் பதிவாளர் ஆவண எண் 318 நாள்:22.01.2024 வாயிலாக தானப்பத்திரம் பதிவு செய்து ஊராட்சி வசம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

எனவே மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம் தஞ்சாவூர் அவர்களின் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவிற்கு ஊராட்சியின் தீர்மான எண்:21 நாள்:09.02.2024-ன் நிபந்தனைகளின்படி

செயல்படுத்த வேண்டும் என தெரிவித்து மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்கி உத்தரவிடப்படுகிறது.

ஊராட்சி மன்ற தலைவர்
பழவாத்தான்கட்டளை

தலைவர்,
பழவாத்தான்கட்டளை ஊராட்சி

இணைப்பு:

1. மனைப்பிரிவு வரைப்படம்
2. மனைப்பிரிவு நிபந்தனைகள்.

நகல்:

1. பா.சாமிநாதன்,
   த/பெ பாலசுந்தரம்,
   34 காந்தி நகர்,
   கும்பகோணம் டவுன்,
   தஞ்சாவூர் மாவட்டம்.
2. செயலாளர் தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையர்(TNRERA).
   1-A காந்தி இர்வின் பாலம் ரோடு, முதல்தளம்,
   எழும்பூர், சென்னை-600008.
3. வைப்பரை வரைப்படம் 1 (மாநா) நிபந்தனைகள் - 1.

